# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## இரண்டாம் தவணை பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 2nd Term Examination - 2021

**வணிகக்கல்வி - I**
**Business Studies - I**

**Three Hours** | **Gr. 12 (2022)** | **32** | **T** | **I**

**அறிவுறுத்தல்கள் :-**

- எல்லா வினாக்களுக்கும் இத்தாழிலேயே விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- *01* தொடக்கம் *15* வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- *16* தொடக்கம் *25* வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| *01 - 15* | |
| *16 - 25* | |
| மொத்தம் | |

*01.* பின்வரும் கூற்றுக்களில் வணிக நடவடிக்கை ஒன்றாகக் கருதக்கூடிய கூற்றினைத் தெரிவுசெய்க.
1. சிவா என்பவர் தனக்குச் சொந்தமான கடைத்தொகுதி ஒன்றை தனது நண்பருக்கு விற்பனை செய்தார்.
2. அமலினி என்பர் தமது வீட்டுத் தோட்ட உற்பத்திகளை தினந்தோறும் உணவிற்காக பயன்படுத்துகின்றார்.
3. நாமல் என்பர் கழிவுப் பொருட்களில் இருந்து உரங்களைத் தயாரித்து விநியோகிக்கும் நிறுவனம் ஒன்றை உருவாக்கினார்.
4. கலா என்பர் தனது புதல்விகளுக்கு நவீன வடிவமைப்புடனான ஆடைகளைத் தயாரித்து வழங்கினாள்.
5. நேசன் என்பர் தனது சொந்த வீட்டை தனது மகளிற்கு நன்கொடையாக வழங்கினார்.

(…….)

*02.* பொருளாதார வாழ்தன்மைக்கு வணிகங்கள் பங்களிப்புச் செய்யும் முறை ஒன்றாகக் கருதமுடியாதது எது?
1. மாற்றமடையும் சிக்கலான தேவை விருப்பங்களை நிறைவு செய்தல்
2. சந்தைப் பங்கை அதிகரித்தல்
3. புத்துருவாக்கம்
4. வேலை வாய்ப்பு
5. தேசிய பொருளாதார விருத்தி (…….)

03. பின்வருவனவற்றில் வணிகத்தின் பண்பொன்றாகக் கூறமுடியாதது எது?
1. விற்பனை அல்லது பரிமாற்றம் இடம்பெறல்
2. பொருட்கள் சேவைகளின் கொடுக்கல் வாங்கல் இடம்பெறல்
3. இலாபத்தினால் அல்லது நட்டத்தினால் ஊக்குவிக்கப்படல்
4. இடர்கள் காணப்படல்
5. விருப்பங்களைத் தொற்றுவிக்க முடிதல் (…….)

04. வணிகம் ஒன்றின் பேரினச் சூழல் காரணிகளையும் அவற்றுக்குரிய துணைக் காரணிகளையும் உள்ளடக்கிய அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| பேரினச் சூழல் காரணி | துணைக் காரணிகள் |
|---|---|
| 1. அரசியல் சூழல் | A. வரையறுக்கப்பட்ட தொழில்நுட்ப அறிவும் பொருத்தமற்ற தொழில் ஏற்படும். |
| 2. தொழில்நுட்பச் சூழல் | B. பற்றாக்குறையான வளங்களும் சூழல் மாசாடைதலும் |
| 3. இயற்கைச் சூழல் | C. உயர் போட்டியும் சர்வதேச நிறுவனங்களின் தலையீடும் |
| 4. பூகோளச் சூழல் | D. கடுமையான சட்ட திட்டங்களும் தேவையற்ற அரசியல் தலையீடும். |

பேரினச் சூழல் காரணிகளுக்கு பொருத்தக்கூடிய துணைச் சூழல் காரணிகளைச் சரியாக எடுத்துக்காட்டும் கூற்றைத் தெரிவுசெய்க.

1. D, B, A, C 2. D, A, B, C 3. C, A, B, D
4. C, B, A, D 5. B, A, C, D (…….)

05. வணிகம் ஒன்றின் சமூகப் பொறுப்புக்கள் சில கீழே தரப்பட்டுள்ளது.
A – நியாயமான உழைப்பினைப் பெற்றுக் கொள்ளல்
B – நியாயமாக நடந்து கொள்ளுதல்
C – பொருளாதார நலன்களைப் பெற்றுக்கொள்ளுதல்
D - சூழலை நேசிப்பவராக கருமமாற்றல்
E – வினைத்திறமையானதும் நேர்மையானதுமான முகாமைத்துவம்
F – சமத்துவநிலை

மேலே கூறப்பட்டவற்றில் உரிமையாளருக்கு மட்டும் பொருந்தக்கூடிய கூற்றை தெரிவுசெய்க.

1. A, B, E 2. B, C, E 3. A, E, F
4. A, C, E 5. A, D, F (…….)

06. சில்வா என்பவர் உடன் உணவு உற்பத்திகளை மேற்கொண்டு வழங்கும் நிறுவனம் ஒன்றின் உரிமையாளர் அவார். இவர் உடல்நலத்திற்கு பாதகமான சுவையூட்டிகளை உற்பத்தி செயன்முறையில் பயன்படுத்துவதுடன் அவற்றிலான விற்பனை செய்வதற்கு மாயையான விளம்பர உத்திகளைப் பயன்படுத்தி வருவதுடன் KFC, Pizza போன்ற நிறுவனங்களின் குறியீடுகளை ஒத்த குறியீடுகளையும் தமது உற்பத்தி பொதியில் பொறித்துவருகின்றார்.

மேலே கூறப்பட்ட சம்பவத்தில் மீறப்பட்டுள்ள வணிக ஒழுக்கநெறிகளின் எண்ணிக்கை யாது?

1. 1 2. 2 3. 3 4. 4 5. 5 (…….)

07. பின்வருவன நிலைபேறான அபிவிருத்தியுடன் தொடர்புடையவை ஆகும்?

A – வறுமை ஒழிப்பு

B – பூரண வேலைவாய்ப்பு

C – நல்லொழுக்கம்

D – பால்நிலை சமத்துவம்

E – உற்பத்தியும் நுகர்வும்

F – தரமான கல்வி

G – சர்வதேச வியாபாரம்

மேலே கூறப்பட்டவற்றில் நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்களை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவுசெய்க.

1. A, C, D, F  2. A, C, D, E  3. B, C, E, G

4. B, D, E, G  5. C, D, F, G  (…….)

08. 2020ம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கைப்படி நாணயக் கொள்கைக் கருவி ஒன்றாகக் கருதமுடியாதது எது?

1. சலுகைக் கடன் திட்டங்கள்  2. குறிப்பிட்ட வட்டிவீதக் குறைப்புக்கள்

3. தார்மீக வேண்டுகோள் விடுத்தல்  4. ஒழுக்காற்றுக் கடப்பாடுகள்

5. முன்னோக்கிய வழிகாட்டல்கள்  (…….)

09. பின்வருவன வணிக அமைப்புக்களுக்கு சில உபகரணங்கள் ஆகும்.

A – லக்சுமி ரேடர்ஸ்

B – வரையறுக்கப்பட்ட லங்கா கிளியர் தனியார் கம்பனி

C – செல்வா அன்பிதர்ஸ்

D – வரையறுத்த மலிபன் லிமிடட்

E – ஹட்டன் தேசிய வங்கி (PLC)

F – பிள்ளையார் களஞ்சியம்

மேலே கூறப்பட்டவற்றில் தனி மனித அந்தஸ்து அற்ற நிறுவனங்களைக் கொண்ட தொகுதியைத் தெரிவுசெய்க.

1. A, C, F  2. A, C, E  3. B, D, E

4. B, E, F  5. C, D, E  (…….)

10. கூட்டுறவு வணிகம் தொடர்பில் சரியான கூற்றினைத் தெரிவுசெய்க.

1. இழிவு மூலதனம் 100000/=
2. தேசிய கூட்டுறவுத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படும்.
3. பதிவுக் கட்டணம் அறவிடப்படுவதில்லை
4. அரச துறையைச் சேர்ந்த இலாப நோக்கமற்ற வணிக அமைப்பு
5. அமைப்பு அகவிதி பதிவு செய்தலின்போது கட்டாயமானது.  (…….)

11. அஸ்வின் என்பர் தனது படைப்பாற்றல் மூலம் மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தக்கூடிய நாற்காலி ஒன்றை உருவாக்கி தனது அற்பணிப்பான செயற்பாட்டின் மூலம் பல மாற்றங்களை ஏற்படுத்தி தனது தற்சார்பின் மூலம் அறிமுகப்படுத்தினார். அத்துடன் இந்த நாட்களிற்கு சந்தையில் உயர்வான கேள்வி ஏற்படும் என்ற தன்நம்பிக்கையுடன் இதனை ஓர் வணிகமாக்கினார்.

மேற்கூறப்பட்ட சம்பவத்தில் காணப்படும் முயற்சியாண்மையின் பண்புகள் எத்தனை?

1. 1    2. 2    3. 3    4. 4    5. 5    (…….)

12. முயற்சியாண்மையின் அபிவிருத்தியின் மீது செல்வாக்குச் செலுத்தும் தனிநபர் காரணிகளும் சமூகக் காரணிகளும் கீழே தரப்பட்டுள்ளது.

A – அனுபவம்

B – முன்மாதிரி

C – வாய்ப்புக்கள்

D – தலமைத்துவம்

E – போட்டி

F – கல்வி

G – தூரநோக்கு

H – முதலீட்டாளர்

மேலே கூறப்பட்டவற்றில் முயற்சியாண்மையின் தனிப்பட்ட காரணிகளை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.

1. A, C, E    2. A, D, F    3. B, C, G

4. C, D, F    5. C, B, H    (…….)

13. பின்வரும் அட்டவணையானது பண்டமாற்று முறையின் குறைபாடுகளையும் பணத்தின் தொழிற்பாடுகளையும் எடுத்துக் காட்டுகின்றது?

| பண்டமாற்றின் குறைபாடுகள் | பணத்தின் தொழிற்பாடுகள் |
|---|---|
| 1. இரட்டைத் தேவைப் பூர்த்தியின்மை | A. செல்வக் களஞ்சியம் |
| 2. பெறுமதியை மதிப்பிடமுடியாமை | B. பிற்போடப்பட்ட கொடுப்பனவுச் சாதனம் |
| 3. எதிர்காலத் தேவைக்கு சேமித்து வைக்கமுடியாமை | C. பரிமாற்று ஊடகமாகத் தொழிற்படல் |
| 4. கடனடிப்படையில் கொள்வனவு செய்யமுடியாமை | D. பெறுமான அளவைபோல் |

பண்டமாற்றின் குறைபாடுகளைத் தீர்ப்பனவு செய்யக்கூடிய வகையில் பணத்தின் தொழிற்பாடுகளை சரியாகக் காட்டும் கூற்றைத் தொரிவு செய்க.

1.C, D,B, A    2. C, A, B, D    3. C, D, A, B

4. B, C, A, D    5. B, D, A, C    (…….)

14. இலங்கையில் வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் ஓர் வங்கி முறிவடையும் கட்டத்தில் வழங்கக்கூடிய உயர்ந்த பட்ச இழப்பீட்டுத் தொகை யாது?

1. பத்து இலட்சம்    2. பதினொரு இலட்சம்    3. பதினைந்து இலட்சம்

4. பதினாறு இலட்சம்    5. இருபத்தைந்து இலட்சம்    (…….)

15. காசோலைப் பயன்பாடு தொடர்பில் சரியான கூற்றினைத் தெரிவுசெய்க.

1. காசோலையை குறுக்குக் கோடிடப்பட்ட காசோலை குறுக்கு கோடிடப்படாத காசோலை என இரு வகைப்படுத்தமுடியும்.
2. காசோலை ஒன்றில் இருந்து குறுக்குக் கோட்டினை நீக்கும் அதிகாரம் வணிக வங்கிக்கே காணப்படும்.
3. காசோலை ஒன்றின் ஆயுள் காலம் ஆறு மாதங்கள் ஆகும்.
4. காசேலைப் பயன்பாடு உண்டியல் சட்டத்திற்கு அமைய இடம்பெறுகின்றது.
5. காசோலையுடன் சம்மந்தப்பட்ட அனைத்து தரப்பினரது சம்மதமும் காசோலை ஒன்றில் மாற்றம் செய்யும்போது அவசியம். (…….)

❖ **16 – 20 வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி இடைவெளி நிரப்புக.**

16. (அ) நேரில் உற்பத்தியான கூறுகளாக ………………………., ……………………………….. ………………………………………………….. காணப்படும்.

(ஆ) நுகர்வுப் பொருட்களை …………………… ………..…., ……………………………… எனவும் வகைப்படுத்த முடியும்..

17. (அ) வணிகத்தில் செல்வாக்குச் செலுத்தக்கூடியதும் வணிகத்தால் கட்டுப்படுத்த முடியாததும், நாட்டின் நிதிமுறை தொழிப்படுத்துணரால் கட்டுப்படுத்தக்கூடிய சூழல் …………………… ஆகும்.

(ஆ) இலங்கை மத்திய வங்கியானது மொத்த உள்நாட்டு உற்பத்தியினை தற்போது ……………………………. அடிப்படையில் கணிப்பீடு செய்கின்றது.

18. (அ) நாணயக்கொள்கையானது………………………………. ஆல் வகுத்து, நடைமுறைப்படுத்தப் படும் அதேவேளை இறைக் கொள்கையானது…………………… ஆல் வகுத்து நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

(ஆ) அங்கீகார வணிகம் தொடர்பில் ……………..…………… இற்கும் ……….………………. இடையில் ஏற்படுத்தப்படும் உடன்படிக்கை …….……………………………… ஆகும்.

19. (அ) அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களின் கணக்குகள் …………………………………… ஆல் கணக்காய்வு செய்யப்படும் அதேவேளை கூட்டுறவு நிறுவனங்களின் கணக்குகள் ……………………………………. ஆல் கணக்காய்வு செய்யப்படுகின்றது.

(ஆ) வரையறுத்த பொதுக் கம்பனிகள் ஆனவை …………………………..……………, ……………………………… என வகைப்படுத்தப்படுகின்றது.

20. (அ) 2020 ஆண்டு மத்திய வங்கி அறிக்கையின் பிரகாரம் சிறப்பியல்பு வாய்ந்த நிதி நிறுவனங்கள் என்பதனுள் சேர்த்துக் கொள்ளப்பட்ட நிதி வியாபார அமைப்பு …………………………… ஆகும்.

(ஆ) அன்னியச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கும் நாணயக் கடிதத்தினை வழங்குவதற்கும் அனுமதி வழங்கப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த வங்கி ………………………. ஆகும்.

❖ **21 – 25 வரையான வினாக்களுக்கு மிகவும் சுருக்கமான விடை தருக.**

21. வணிகத்தை வகைப்படுத்தும் அடிப்படை நியதிகளைக் குறிப்பிடுக.

i. ………………………………………………………………………………………………

ii. ………………………………………………………………………………………………

iii. ………………………………………………………………………………………………

iv. ………………………………………………………………………………………………

22. வணிக ஒழுக்க நெறிகளின் வகைகள் நான்கினைக் குறிப்பிடுக.

i. ………………………………………………………………………………………………

ii. ………………………………………………………………………………………………

iii. ………………………………………………………………………………………………

iv. ………………………………………………………………………………………………

23. நுகர்வோர் பொறுப்புக்கள் நான்கினைக் குறிப்பிடுக.

i. ………………………………………………………………………………………………

ii. ………………………………………………………………………………………………

iii. ………………………………………………………………………………………………

iv. ………………………………………………………………………………………………

24. பணத்தின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

i. ……………………………………………………………………………………………………

ii. ……………………………………………………………………………………………………

iii. ……………………………………………………………………………………………………

iv. ……………………………………………………………………………………………………

25. ஒப்பந்த சேமிப்பு நிறுவனம் என்பதனுள் உள்ளடக்கப்படும் நிதி நிறுவனங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

i. ……………………………………………………………………………………………………

ii. ……………………………………………………………………………………………………

iii. ……………………………………………………………………………………………………

iv. ……………………………………………………………………………………………………

.

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
இரண்டாம் தவணை பரீட்சை - 2021
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**2nd Term Examination - 2021**

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| **வணிகக்கல்வி - II**<br>**Business Studies - II** | **Three Hours**<br>**Gr. 12 (2022)** | **32** | **T** | **II** |

❖ ***அறிவுறுத்தல்கள்***

*ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.*

## பகுதி - I

01) I) அ) வணிகம், வர்த்தகம் ஆகிய எண்ணக்கருக்களுக்கிடையிலான தொடர்பினை விளககுக.
ஆ) தேவைகள், விருப்பங்கள் என்பவற்றை உதாரணத்தோடு விபரிக்குக.

II) அ) வணிகம் காலம் காலமாக பல்வேறு பரிமாணங்களை கொண்டுள்ளது வணிகத்தின் பரிணாம வளர்ச்சிக் கட்டங்களை ஒழுங்கு முறையில் தருக.
ஆ) வணிகத்தின் நவீன போக்குகள் நான்கினைக் குறிப்பிடுக.

III) சீமெந்து உற்பத்தி நிறுவனத்தினது உற்பத்திச் செயன்முறை தருக.

IV) அ) தொழிற்பகுப்பின் அனுகூலங்களைக் குறிப்பிடுக
ஆ) சிறப்புத் தேர்ச்சியின் வகைகளைக் குறிப்பிடுக.

V) அ) வணிகச் சூழல் என்பதனால் கருதப்படுவது யாது?
ஆ) வழங்குனர் வணிகம் ஒன்றிற்கு அச்சுறுத்தலாக அமைவதற்கான நான்கு காரணங்களைக் குறிப்பிடுக.

(2 x 5 = 10 புள்ளிகள்)

02) I) அ) சமூகப் பொறுப்பு என்பதனால் கருதப்படுவது யாது?
ஆ) சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதனால் வணிகம் ஒன்று பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள் நான்கினை குறிப்பிடுக.

II) அ) சமூகப் பொறுப்புக்களை தாங்க வேண்டிய தரப்பினர் என்ற வகையில் வாடிக்கையாளர் களுக்காக பேணப்படும் சமூகப் பொறுப்புக்கள் எவை?
ஆ) வணிக ஒழுக்கம் என்பதனை வரையறுக்க.

III) அ) நிலைபேறான அபிவிருத்தி என்பதன் அர்த்தம் யாது?
ஆ) வணிகமானது சூழல் நிலைபேறான தன்மையைக் கொண்டுள்ளது என்பதனை உறுதிப் படுத்துவதற்கான தன்மையைக் கொண்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகள் எவை?

IV) அ) அரசின் பேரினப் பொருளாதார நோக்கங்களைக் குறிப்பிடுக.
ஆ) அந்நோக்கங்களை அடைத்து கொள்வதற்கான வணிகப் பங்களிப்புக்களைக் குறிப்பிடுக.

V) அ) நாணயக் கொள்கை என்பதனை வரையறுக்குக.

ஆ) 2020ம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கையின்படி நாணயக் கொள்கைக் கருவிகளாக குறிப்பிடப்பாட்டுள்ள விடயங்கள் எவை?

(2 x 5 = 10 புள்ளிகள்)

03) I) அ) தனிஉடமை வணிகம் ஒன்றுடன் ஒப்பிடும்போது பங்குடமை வணிகம் ஒன்றை ஆரம்பிப்பதன் நன்மைகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) எழுத்து மூலமான பங்குடமை ஒப்பந்தம், பங்குடமை உறுதி என்பதனை வேறுபடுத்துக.

II) அ) வரையறுத்த பொதுக் கம்பனி ஒன்றின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) கம்பனி ஒன்றின் கூட்டிணைப்புச் சான்றிதழில் குறிப்பிடப்பட வேண்டிய விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

III) அ) கூட்டுறவு வணிகத்தின் வளர்ச்சிப் போக்குகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) கூட்டுறவு வணிகத்துடன் தொடர்புடைய அரச நிறுவனங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

IV) அ) அங்கீகார வணிகம் தொடர்பில் அங்கீகார வணிக ஒப்பந்தம் ஒன்றில் காணப்படும் விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) அங்கீகார வணிக முறையில் அங்கீகாரம் பெறுபவர் பெற்றுக் கொள்ளும் நன்மைகள் நான்கினைக் குறிப்பிடுக.

V) அ) அரச திணைக்களம் ஒன்றின் பண்புகள் எவை?

ஆ) கூட்டுத்தாபனத்தின் வகைகளைக் கூறி ஒவ்வோர் உதாரணம் தருக.

(2x5 = 10 புள்ளிகள்)

## பகுதி – II

04) I) அ) முயற்சியாண்மை என்பதனை வரையறுக்குக.

ஆ) முயற்சியாண்மையின் நவீன போக்குகள் எவை?

II) அ) முயற்சியாண்மைச் செயன்முறையினை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

ஆ) முயற்சியாண்மைக்கும் பொருளாதார விருத்திக்கும் இடையிலான தொடர்பினை வரை படத்தில் காட்டுக.

III) முயற்சியாளரையும் வணிகரையும் வேறுபடுத்துக.

IV) அ) சிறிய நடுத்தர வணிகங்களின் பொதுவான பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்களை ஆரம்பிக்கும்போது கவனத்தில் கொள்ளப்படும் காரணிகளைக் குறிப்பிடுக.

V) அ) சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களின் வெற்றிக்கு முயற்சியாண்மை முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் எவை?

ஆ) சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்களுக்கு அரசினால் வழங்கப்படும் நிதியல்லா ஊக்குவிப்புக்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(5 x 2 = 10 புள்ளிகள்)

05) I) அ) பணத்தின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக?

ஆ) சட்டப்பணத்தின் கூறுகளைக் குறிப்பிட்டு விளக்குக.

II) அ) பணத்தின் பரிநாம வளர்ச்சிக் கட்டங்களைக் குறிப்பிடுக.

ஆ) பண நிரம்பல் என்பதனை வரையறுக்குக.

III) கடனட்டை, வரவு அட்டை என்பவற்றுக்கிடையிலான ஒற்றுமை வேற்றுமை என்பவற்றினைக் குறிப்பிடுக.

IV) அ) இலத்திரனியல் பணத்தின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) ஒன்று திரட்டப்பட்ட விரிந்த பணநிரம்பல் $(M_2b)$ என்பதன் கருத்து யாது?

V) மத்திய வங்கியினால் வணிகங்களுக்கு ஆற்றப்படும் செயற்பாடுகள் நான்கினைக் குறிப்பிடுக.

(5 x 2 = 10 புள்ளிகள்)

06) I) அ) உரிமம் பெற்ற வணிக வங்கிகள் என்பதனை வரையறுக்குக.

ஆ) வணிக வங்கி ஒன்றின் பிரதான தொழிற்பாடுகளை பாச்சற்கோட்டுப்படத்தில் காட்டுக.

II) வணிக வங்கி ஒன்றினால் வழங்கப்படும் ஏனைய சேவைகள் நான்கினைக் குறிப்பிடுக.

III) சேமிப்பு வைப்பிற்கும், நடைமுறை வைப்பிற்கும் இடையிலான வேறுபாடுகள் நான்கினைக் குறிப்பிடுக.

IV) நிதிக் குத்தகை, செயற்பாட்டுக் குத்தகை என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டினைக் குறிப்பிடுக.

V) இலங்கை வங்கி சங்கானைக் கிளையில் நடைமுறைக் கணக்கினைப் பேணும் சுந்தர் என்பவர் மக்கள் வங்கி சுன்னாகம் கிளையில் நடைமுறைக் கணக்கினைப்பேணும் பாலா என்பவருக்கு ஐந்து இலட்சம் பெறுமதியான மோட்டார் சைக்கிளை விற்பனை செய்துள்ளார். இதற்கான கொடுப்பனவினை பாலா ஓர் காசோலை மூலம் வழங்கத் தீர்மானித்ததுடன் அக்காசோலை யினை அதிஉச்ச பாதுகாப்புடைய காசோலையாக வழங்கத் தீர்மானித்தார்.

மேற்குறித்த சம்பவத்தின்படி காசோலை ஒன்றினை வரைந்து அதன் பகுதிகளைக் குறித்துக் காட்டுக.

(5 x 2 = 10 புள்ளிகள்)